**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081618

1. District மாவட்டம் : கரூர்  PS காவல்நிலையம் : ஊ.த.க பிரிவு  Year ஆண்டு : 2024  FIR No. மு.த.அ. எண் : 01/AC/2024  Date நாள் : 06/02/24

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018  Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 02.02.24 at 1345hrs & 05.02.24 at 1200hrs
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.02.24  Time : நேரம் 1645hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.02.24  Time : நேரம் 1645 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : சுமார் 8 km தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி : ராயனூரில் உள்ள மேட்டுக்கிணத்துப்பட்டி தமிழ்நாடு மின்சாரவாரிய, AE ஆபிஸ்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு.சு. மணிகண்டன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : திரு. சுந்தர நாராயணன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் : இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் : கூலி / பஞ்சர் ஒட்டுதல்  (g) Address : முகவரி : 3வது தெரு, கோவிந்தன் பட்டி, கரூர் தொழிற்பேட்டை அருகில் பாண்டிபுரம் கரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. முருகானந்தம், போர்மேன், ராயனூரில் உள்ள மேட்டுக்கிணத்துப்பட்டி தமிழ்நாடு மின்சார வாரிய AE அலுவலகம், கரூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature]

[signature] 6/2/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.02.24 at 10.10 hrs

Name: பெயர் K. சிவநாதன்
Rank: நிலை காவல் ஆய்வாளர் No.
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருச்சி

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.01/AC/2024 u/s 7(a) of The PC Act, 1988 as amended in 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் K.சாமிநாதன் ஆகிய நான் 05.02.2024 ஆம் தேதி மாலை சுமார் 16.45 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது ச.மணிகண்டன், த/பெ சங்கரநாராயணன், 3வது தெரு, கோல்டன் சிட்டி, கரூர் கலெக்டர் ஆபிஸ் பின்புறம், கரூர் என்பவர் நிலையம் ஆஜராகி ஒரு கணினியில் தட்டச்சு செய்த எழுத்துமூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் ச.மணிகண்டன், த/பெ சங்கரநாராயணன், 3வது தெரு, கோல்டன் சிட்டி, கரூர் கலெக்டர் ஆபிஸ் பின்புறம், கரூர். பெறுநர் இன்ஸ்பெக்டர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு துறை ஆபிஸ், பாலிடெக்னிக் அருகில், கரூர்.

நான் கரூர் கலெக்டர் ஆபிஸ் பின்புறமுள்ள கோல்டன் சிட்டி 3வது தெருவில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பாக தாந்தோன்றிமலை காளியப்பனூரில் வாடகை வீட்டில் குடியிருந்து வந்தேன். எனது மனைவி சுமதி வாரக்கூலி வேலைக்கு செல்கிறார். நான் நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கு பஞ்சர் ஒட்டும் வேலை செய்துவருகிறேன். எனக்கு தனியாக கடை எதுவும் இல்லை. நான் கரூர் கலெக்டர் ஆபிஸ் பின்புறமுள்ள கோல்டன் சிட்டியில் ஆச்சிமங்கலம் கிராம சர்வே எண்.45-ல் உள்ள மனை எண் 58-ல் மனையின் தென்புறம் இருந்த சுமார் 1000 சதுரடி கொண்ட மனையை தான்தோன்றிமலை வெள்ளக்கவுண்டன் நகரைச் சேர்ந்த அம்மையப்பன் மகன் பழனிச்சாமி என்பவரிடமிருந்து கடந்த 9.5.2019 அன்று வெள்ளியணை பத்திர அலுவலக பத்திர எண்.1276/2019-ன் படி சுத்தக் கிரையம் பெற்றேன். அந்த மனையில் நான் பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தில் வீடு கட்டுவதற்காக கரூர் பாலாம்பாள்புரத்தில் உள்ள ஆபிசில் மனு கொடுத்தேன். அதன் பின்னர் அதற்கான உதவித்தொகை என்னுடைய கனரா பேங்க் மூலம் வந்தது. இந்த உதவித்தொகையுடன் கையில் இருந்த பணத்தையும் வைத்து ரொம்ப சிரமத்தில் சுமார் 3 ½ வருசத்திற்கு முன்பாக ஒரு சிறிய அட்டை வீடு கட்ட ஆரம்பித்தேன். இந்த வீடு கட்டுவதற்காக ராயனூரில் உள்ள முஷ்டகிணத்துப்பட்டி ஈபி-யின் ஏஈ ஆபிசில் டெம்பரரி ஈபி சர்வீஸ் கனெக்சனுக்கு மனு கொடுத்து டேரிப் VI-ல் டெம்பரரி ஈபி கனெக்சன் நம்பர் 1417 பெற்றேன். இது கட்டுமானப் பணிக்கான கமர்சியல் கனெக்சனாகும். மேற்படி கோல்டன் சிட்டி 3வது தெருவில் எனது அட்டை வீட்டை கட்டி முடித்துவிட்டு கடந்த பொங்கல் முடிந்து 18.1.2024 அன்று தாந்தோன்றிமலையில் உள்ள சுந்தாம் இ-சேவை மையம் சென்று டேரிப்-VI-ன் கீழான கட்டுமானப் பணிக்கான கமர்சியல் கனெக்சனிலிருந்து வீடுகளுக்கான ஈபி கனெக்சனுக்கு டேரிப்-I ஆக மாற்ற ஆன்லைனில் மனு செய்தேன். இதற்காக நான்

18.1.2024 அன்றும், 23.1.2024 அன்றும் ஆன்லைனிலேயே ஈபி-க்கு செலுத்தவேண்டிய பீஸை கட்டினேன். அதன்பின்னர் கடந்த 29.01.2024 அன்று காலை சுமார் 10.30 மணியளவில் 7708571290 என்ற செல்போன் நம்பரிலிருந்து என்னுடைய 8489106272 என்ற நம்பர் கொண்ட செல்போனுக்கு போன் வந்தது. நான் போனை எடுத்து பேசுனப்ப ராயனூரில் உள்ள ஈபி ஆபிசிலிருந்து போர்மேன் முருகானந்தம் பேசுவதாகச் சொல்லிட்டு என்னுடைய வீட்டை பார்க்க வருவதாகச் சொன்னார். அவர் சொன்ன அரை மணி நேரத்திலேயே அன்று காலை சுமார் 11 மணியளவில் போர்மேன் முருகானந்தம் என்னுடைய வீட்டை வந்து பார்த்துவிட்டு இந்த கனெக்சன் மாற்றி கொடுக்க வேண்டும்னா என்னை கவனிக்கனும்னு சொல்லிட்டு என்னை ஆபிஸ் வரச்சொன்னார். நானும் அன்னைக்கே மதியம் 1½ மணியளவில் ராயனூரில் உள்ள முஷ்டகிணத்துப்பட்டி ஈபி-யின் ஏஈ ஆபிசிற்கு சென்றேன். அப்பொழுது போர்மேன் முருகானந்தம் அவர்கள் வீடு கட்டியுள்ள இடத்தோட பத்திரம், பணம் கட்டுன ரசீது ஜெராக்ஸ் கொடுங்கனு கேட்டார். நானும் ஆபிசிலிருந்து வெளியே சென்று வீடு கட்டியுள்ள இடத்தோட பத்திரம் டேரிப் மாற்ற பணம் கட்டுன ரசீது ஜெராக்ஸ் எடுத்து முருகானந்தம் அவர்களிடம் கொடுத்தேன். சரி நீங்க கிளம்புங்க நான் உங்கள கூப்பிடுகிறேன். இரண்டொரு நாள்ல ஏடி-ய கூட்டிட்டு வந்து வீட்டு வேலை முடிந்துவிட்டதை பாரக்க வேண்டும் என்று சொன்னார். நானும் கிளம்பி வந்துவிட்டேன். நான் 2.2.2024-ந் தேதி காலையில் எனது வீட்டிலிருந்தபோது ஏடி-யும் மற்றொரு நபரும் சுமார் 10½, 11 மணியப் போல எனது வீட்டிற்கு வந்து வீட்டை 10 நிமிடங்கள் சுற்றிப் பார்த்துட்டு கட்டுமானப் பணிக்கான கமர்சியல் கனெக்சனின் மீட்டர் ரீடிங் குறிச்சிட்டு போனார்கள்.

அவர்கள் சென்ற கொஞ்ச நேரத்திலேயே போர்மேன் முருகானந்தம் அவருடைய 7708571290 என்ற செல்போன் நம்பரிலிருந்து என்னுடைய 8489106272 என்ற நம்பர் கொண்ட என் செல்போனுக்கு போன் செய்து என்னுடைய வீட்டை பார்க்க ஏடி வருவதாகச் சொன்னார். நான் அப்போது ஏடி-யும் மற்றொரு நபரும் எனது வீட்டிற்கு வந்து வீட்டை சுற்றிப் பார்த்துவிட்டு மீட்டர் ரீடிங் குறிச்சிட்டு இப்பதான் போனாதாகக் கூறினேன். அப்போது அவர் சரி நீ கிளம்பி ஆபிசிற்கு வா என்று கூறினார். நானும் 2.2.24 அன்றே மதியம் சுமார் 1¾ மணியளவில் ராயனூரில் உள்ள முஷ்டகிணத்துப்பட்டி ஈபி. ஆபிசிற்கு போனேன். அவர் அங்கு இல்லை. நான் வெளியில் வந்தப்ப போர்மேன் முருகானந்தம் வந்துவிட்டார். அதனால் ஆபிஸ் வாசலிலேயே அவரைப் பார்த்தப்ப நான் எங்க வீட்டுக்கு ஏடி-யும் மற்றொரு நபரும் வந்ததை குறிப்பிட்ட போது ஆமாம் அதில ஏடி ஒருத்தர், மற்றொருவர் என்னப்போல அவரும் போர்மேன் தான் என்று சொன்னார். நான் அப்போது சரிங்கண்ணா சீக்கிரம் சர்வீஸ் மாத்திக் கொடுங்கனு சொன்னேன். அப்ப அவர் அன்னைக்கு நான் சொன்னது புரியலயானு கேட்டார். அதற்கு நான் ஆமாண்ணானு சொன்னேன். அப்ப அவர் இந்த கனெக்சன் மாற்றி கொடுக்க வேண்டும்னா 1500 ரூபாய் எனக்கு கொடுத்துடுனு

சொன்னார். அதற்கு நான், அண்ணா பீஸ்லாம் கட்டிட்டேனு சொன்னேன். அதற்கு அவர் இந்த பணம் 1500 ரூபாய் நான் வந்து உங்க வீட்ட பார்த்ததுக்கு உன் கட்டுமானப் பணிக்கான கமர்சியல் கனெக்சனின் மீட்டர் ரீடிங் வச்சு நான் பைல் ரெடி செஞ்சு ஏடி-க்கு அனுப்ப ஏற்பாடு செய்ய எனக்கு கொடு இல்லைனா சர்வீஸ் மாத்த ஏற்பாடு செய்யமாட்டேனு சொல்லிட்டார். நான் அவர்கிட்ட நானே ரொம்ப சிரமத்துலதான் இந்த வீட்டை கட்டிருக்கேன் என்று சொன்னேன். அப்போது அவர் நான் கேட்ட 1500 ரூபாய் பணத்த கொடுத்துட்டா ரெண்டு நாள்ல பைல் ரெடிபண்ணி ஏடி-க்கு அனுப்பி மாத்த ஏற்பாடு பன்னுறேனு சொன்னார். நான் அவர்கிட்ட ரொம்ப சிரமத்தில இருக்கிறத எடுத்துச் சொல்லி கெஞ்சினேன். அதுக்கு அவர் ஒரு 500 ரூபாய் குறைச்சிட்டு ரவுண்டா 1000 ரூபாய் கொடுனு கறாரா சொல்லிட்டார். நான் ரொம்ப சிரமத்துல இருக்கிறனால இன்னைக்கு 5.2.24 தேதி மீண்டும் மதியம் சுமார் 12 மணியளவில் ராயனூரில் உள்ள முஷ்டகிணத்துப்பட்டி ஈபி ஆபிசிற்கு போயிட்டு போர்மேன் முருகானந்தத்தை பார்த்தேன். அப்ப அவர் என்ன நான் கேட்ட 1000 ரூபாய் கொண்டாந்திட்டியானு கேட்டார். நான் ரொம்ப சிரமமாக இருப்பதையும் என் இயலாமையையும் சொன்னேன். அதற்கு அவர் வீடுகட்ட பணம் இருக்குது அதுக்கு 1000 ரூபாய் செலவு பண்ண முடியலயானு என்னிடம் கேட்டுட்டு பணத்த கொடுக்கலனா இப்படியே திரிஞ்சிட்டே இருனு சொல்லிட்டார். அவர் பணத்தை ரெடி பண்ணிட்டு நாளைக்கு எனக்கு கூப்புடுனு சொன்னார். நானும் சரிங்கண்ணானு சொல்லிட்டு கிளம்புனப்ப போர்மேன் முருகானந்தம் என்னிடம் நீ இன்னொரு 250 ரூபா வரை பணம் ஆன்லைன்ல கட்டணும்னு சொன்னார். நான் அவரிடம் அந்த பணம் வைத்திருக்கிறேன் இ சேவை மையத்துல கட்டிடுறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் இல்ல இல்ல நாளைக்கு எனக்கு கொடுக்கிற பணத்தோட சேர்த்து கூடுதலா 250 ரூபாய கொண்டாந்திடு நானே கட்டிடுறேன் என்றும் பணத்தை ரெடி பண்ணிட்டு போன்ல கூப்பிடு என்றும் சொன்னார் சொன்னார். நானும் சரிண்ணானு சொல்லிட்டு வீட்டிற்கு போயிட்டேன். எனக்கு போர்மேன் முருகானந்தம் கேட்ட 1000 ரூபாய் பணத்தை அவருக்கு லஞ்சமாக கொடுத்து கமர்சியல் சர்வீஸை வீட்டு சர்வீசாக மாற்ற விருப்பம் இல்லை. எனக்கும் போர்மேன் முருகானந்தத்திற்கும் எவ்வித கொடுக்கல் வாங்கலும் இல்லை. எனவே அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் ஆன்லைனில் பணம் கட்டியதற்கான இரண்டு ரசீதுகளையும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (ச.மணிகண்டன்) 05/02/2024.

Sir, Received the complaint on 05.02.2024 at about 16.45 hrs,. a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and reputation of the accused was found to be b ad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2024 u/s 7(a) of the PC Act, 1988 as amended in

2018 at 07.00 hrs on 06.02.2024. Sd/-(xxxxxxxx) 06.02.2024. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original Computer typed complaint of Tr.S.Manikandan, S/o.Tr.Sankara Narayanan, 3rd Street, Golden City, Collector Office Backside, Karur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

6/2/24

**(K.Saminathan)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.